# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 29/2021 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW7/PW-6 | Village: |
| Name :, மருத்துவர் வெற்றிவேலன் | Age :48 |
| | Taluk : |
| Father's/Husband's Name : | |
| | Religion : |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.08.2025.**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1, 2 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.10.2010 ம் தேதி மாலை 6.55 மணியளவில் நான் திருவிடைமருதூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 39 வயது மதிக்கதக்க ஆடலரசு என்பவரை அவரது சகோதரர் ராமகிருஷ்ணன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்திருந்தார். நான் அவரை விசாரித்தபோது அன்றை தினம் மாலை 5.30 மணியளவில் திருபுவனம் மெயின்ரோட்டில் உள்ள பேருந்து நிறுத்தம் அருகில் தன்னை அடையாளம்

தெரிந்த 3 நபர்கள் கருங்கல் மற்றும் மரக்கட்டை கொண்டு தாக்கியதாக கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. அவரது வலது முழங்கை மூட்டின் மேல் வலி இருப்பதாக கூறினார். 1. வலது முழங்கை மூட்டின் மேல் ஒரு சிறிய சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வலியும் வீக்கமும் காணப்பட்டது. அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவரை கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு எலும்பு முறிவு மருத்துவர் மற்றும் காது, மூக்கு, தொண்டை மருத்துவரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கு அவருக்கு வலது முழங்கையில் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. நுண்கதிர் படத்தை பார்வையிட்டதில் எலும்பு முறிவு ஏதும் இல்லை என்று கூறியதால் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கினேன். (**மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

பேருந்து ஓட்டுனர் அவரது இருக்கையில் இருந்து கீழே இறங்கும்போது விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

**மறுவிசாரணை** இல்லை

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC. 29-2021 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-5/PW- 7 | Village: |
| Name : முகமதுயூசுப் | Age :42 |
| Father's/Husband's Name : முகமதுகாசிம் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.08.2025**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திரு. ஸ்ரீதர்ராஜா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது திருபுவனத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு பகல் 12 மணியளவில் நான் திருபுவனத்தில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் இருந்தபோது திருவிடைமருதூர் போலிசார் அங்கு வந்து பஸ் உடைக்கப்பட்ட வழக்கு சம்மந்தமாக விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி**

**கையொப்பங்கள் முறையே அசாஆ 4 மற்றும் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 19.10.2010 ம் தேதி இரவு 7.30 மணியளவில் திருபுவனம் கடைவீதியில் உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் நான் நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த திருவிடைமருதூர் போலிசார் குற்ற எண் 336/2010 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் சம்பவ இடத்தில் இருந்து உடைக்கப்பட்ட பேருந்தின் கண்ணாடி துகள்களை மகசரில் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எழுதாத வெள்ளை தாளில்தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரிகளின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- J. Jayganesh,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**